முதன்மை மாவட்ட நீதிமன்றம், நாகப்பட்டினம்.

முன்னிலை: திரு.டி. கிங்ஸ்லி கிறிஸ்டோபர், எம்.ஏ., எம்.எல்.,

முதன்மை மாவட்ட நீதிபதி.

2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31ம் நாள் வியாழக்கிழமை

(திருவள்ளுவராண்டு 2053, பிலவ வருடம் பங்குனி திங்கள் 17ஆம் நாள்)

CNR No.TNNG010003382019
CNR No.TNNG010006462019
CNR No.TNNG010004042019
CNR No.TNNG010000112019

**நில எடுப்பு அசல் மனு எண்கள் 43/2019, 44/2019, 45/2019 & 46/2019ல் இடைநிலை மனு எண்கள் 02/2020**

நி.எ.அ.மனு எண் 43/2019ல் இ.ம.எண் 2/2020
ஏ. ஆனந்தி .....மனுதாரர்/மனுதாரர்

நி.எ.அ.மனு எண் 44/2019ல் இ.ம.எண் 2/2020
ஏ. இந்திரா .....மனுதாரர்/மனுதாரர்

நி.எ.அ.மனு எண் 45/2019ல் இ.ம.எண் 2/2020
ஜி.ஆர். அப்பாராஜ் .....மனுதாரர்/மனுதாரர்

நி.எ.அ.மனு எண் 46/2019ல் இ.ம.எண் 2/2020
1. ஜி. ஆர். அப்பாராஜ்
2. சண்முகராஜா .....மனுதாரர்கள்/மனுதாரர்கள்

-எதிர்-

1. மாவட்ட ஆட்சியர், நாகப்பட்டினம்
2. வருவாய் கோட்டாட்சியர், நாகப்பட்டினம் ... அனைத்து மனுக்களிலும் எதிர்மனுதாரர்கள்/ எதிர்மனுதாரர்கள்

அனைத்து மனுக்களும் என் முன்பாக 23.03.2022 அன்று இறுதியாக விசாரணைக்கு வந்து, அனைத்து மனுக்களிலும் மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. எஸ். ராமன் அவர்களும், எதிர்மனுதாரர்கள்தரப்பில் அரசு கூடுதல் வழக்கறிஞர் திருமதி. தேவி அவர்களும் ஆஜராகியும், இருதரப்பிலும் எடுத்துரைத்த வாதுரைகளைக் கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் பகரும்....

D KINGSLY CHRISTOPHER

Digitally signed by D KINGSLY CHRISTOPHER
Date: 2022.03.31 17:42:29 +0530

**பொதுவான உத்தரவு**

நி.எ.அ.மனு எண்கள் 43/2019, 44/2019, 45/2019
& 46/2019ல் இ.ம.எண்கள் 02/2020

இம்மனுக்கள் வழக்கறிஞர் ஆணையர் நியமனம் செய்து, வழக்கறிஞர் ஆணையர் மனு சொத்தினை பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்திட உத்தரவிடவேண்டி உ.ந.ச. வகுமுறை 26, விதி 9ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. அனைத்து மனுக்களின் சுருக்கம்:

(அ) மனுதாரர்களுக்கும் மற்ற குடும்ப உறுப்பினர்களுக்கும் நாகப்பட்டினம் தாலுக்கா, நாகூர், முட்டம் கிராமத்தில் R.S.Nos.67/3A, 67/5B, 68/1, 68/2, 68/3, 88/5, 68/6, 69/1, 68/7ல் சொந்தமாக சொத்துக்கள் உள்ளன. மேற்படி சொத்துக்களும் மற்றும் பிற அனைத்து சொத்துக்களும் தமிழ்நாடு மீன்வள ஆராய்ச்சி பல்கலைக்கழகம் அமைக்க கையகப்படுத்தப்பட்டுள்ளன. இதுதொடர்பாக நில எடுப்புச் சட்டம் பிரிவு 4(1)ன்படி 08.10.2012 அன்று G.O.No.173 பிறப்பிக்கப்பட்டு, இடைக்கால இழப்பீடு வழங்குவதற்கான உத்தரவு 2014ம் ஆண்டில் பிறப்பிக்கப்பட்டது. அதுகுறித்து மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் மனுதாரர்கள் தாக்கல் செய்த ரிட் மனுக்கள் அனுமதிக்கப்பட்டு, புதிதாக இயற்றப்பட்ட மத்தியச்சட்டம் 30/2013ன்படி இழப்பீடு வழங்க கையகப்படுத்துதல் ஆணையத்திற்கு உத்தரவிடப்பட்டது. மேலும் புதிய சட்டத்தின் கீழ் நடவடிக்கைகள் தொடங்கப்படும்வரை மனுதாரர்களை வெளியேற்றம் செய்யக்கூடாது என்றும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. எனினும் மேற்படி உத்தரவுகள் மற்றும் புதிய சட்ட வழிகாட்டுதல்களுக்கு மாறாக இறுதி தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டது. அதனை எதிர்த்து இழப்பீட்டை மறுநிர்ணயம் செய்யக்கோரி இந்நீதிமன்றத்தில் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ளன.

(ஆ) சட்டப்பிரிவு 64ன் கீழ் ரெபரன்ஸ் தாக்கல் செய்யப்பட்டதற்கு பின்னிட்டு, நிலம் கையகப்படுத்தியதில் காய்க்கும் மற்றும் நல்ல வருமானம் தரும் தென்னை மரங்களின் மதிப்பு சரியாக கணக்கிடப்படாமல் தரங்கம்பாடி வேளாண்மை இணை

D KINGSLY CHRISTOPHER

Digitally signed by D KINGSLY CHRISTOPHER
Date: 2022.03.31 17:42:45 +0530

இயக்குநரால் குறிப்பிடப்பட்ட மதிப்பைவிட ஒரு மரத்தின் மதிப்பு மிகவும் குறைவாக மதிப்பிடப்பட்டு ரூ.5000/- இழப்பீடாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது தெரியவந்தது. தேசிய நெடுஞ்சாலை எண் 45A விரிவுபடுத்துவதற்காக கையகப்படுத்தப்பட்ட நிலத்தில் உள்ள வளர்ந்து வருமானம் தரும் ஒவ்வொரு தென்னை மரத்திற்கும் ரூ.25,500/- இழப்பீடாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இழப்பீட்டுத் தொகையை மதிப்பிடும்போது மரங்களின் மதிப்பு தவிர வருவாய் இழப்பும் சேர்க்கப்படவேண்டும். கையகப்படுத்தப்பட்ட நிலங்களில் மரங்களை கணக்கிடும்போது தென்னை மரங்கள் 479, சிறியது 190, 25 வயதிற்கும் மேற்பட்ட போர்ஷியா 807, 15 வயதுடைய நாட்டு தேக்கு மரங்கள் 605, 10 வயதுடைய வேம்பு மரங்கள் 90, 12 வயதுடைய கொய்யா மரங்கள் 12, வளர்ந்த புளியமரங்கள் 5, வளர்ந்த மா மரங்கள் 5 ஆகியவை விடுபட்டுள்ளன.

(இ) எனவே மனு சொத்துக்களை ஆய்வு செய்து, அதன் இயற்பியல் அம்சங்கள் மற்றும் அதன் வயதுக்கு ஏற்ப பல்வேறு மரங்களின் எண்ணிக்கை போன்றவற்றைக் குறித்து விரிவான அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டால்தான் மனுதாரர்களின் கோரிக்கையின் உண்மைத்தன்மையை தீர்மானிப்பதற்கு நீதிமன்றத்திற்கு உதவியாக இருக்கும். சமீபத்திய கஜா புயலில் சில மரங்கள் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது. நிலம் கையகப்படுத்துதல் என்ற போர்வையில் மனுதாரர்கள் சொத்துக்களை அனுபவிக்கவிடாமல் தடுக்கிறார்கள். எனவே இம்மனுக்களை அனுமதித்து உத்தரவிடவேண்டும். இல்லாதபட்சத்தில் மனுதாரர்களுக்கு பெருத்த கஷ்ட, நஷ்டம் ஏற்படும்.

3. எதிர்மனுதாரர்கள்தரப்பில் அசல் மனுக்களில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையில் கண்டுள்ள விபரங்களையே இந்த மனுக்களின் எதிருரையாக பாவிக்கவேண்டி குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டது. **அனைத்து அசல் மனுக்களிலும் தாக்கல் செய்யப்பட்ட எதிருரைகளின் சுருக்கம்:**

இம்மனு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் நிலைநிற்கத்தகுந்ததல்ல. மனுதாரர்கள் மனுக்களில் குறிப்பிட்டுள்ள நிலங்கள் அரசினால் தமிழ்நாடு மீன்வளப்பல்கலைக்கழகம் மற்றும் மீன்வள ஆராய்ச்சிமையம் அமைத்திட நில எடுப்புசெய்யப்பட்டது என்பது

D KINGSLY CHRISTOPHER

Digitally signed by D KINGSLY CHRISTOPHER
Date: 2022.03.31 17:43:01 +0530

உண்மை. தீர்ப்பாணை எண் 1/A/14/dated 18.12.2014ன்படி நிர்ணயித்து வழங்கப்பட்ட இழப்பீட்டுதொகை குறைவாக உள்ளதாக குறிப்பிட்டு மனுதாரர்கள் இழப்பீட்டுத் தொகையை பெற்றுக்கொள்ளவில்லை. இழப்பீட்டுத் தொகையினை உயர்த்தி வழங்கிட வேண்டும் என்று கோரி மாண்புமிகு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் உள்ள நிலையில், மனுதாரர்கள் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த ரிட்மனுக்களில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்படி கையகப்படுத்தப்பட்ட நிலத்திற்கு வரைவு தீர்ப்பாணை எண். 1E/2018/நாள் 17.07.2018ன்படி இழப்பீட்டுத் தொகை நிர்ணயிக்கப்பட்டு காசோலை வழங்கப்பட்டுள்ளது. அதனை மனுதாரர்கள் பெற்றுக்கொண்டுவிட்டனர். அதனை மறைத்து அரசினை ஏமாற்றி இன்னும் கூடுதலாக இழப்பீட்டுத்தொகை பெற்றிட வேண்டும் என்ற எண்ணத்தில் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்கள் அரசினால் ஆர்ஜிதம் செய்யப்பட்ட இடத்திலிருந்து கணிசமான வருட வருமானம் ஈட்டிவந்ததாக தெரிவித்துள்ளது ஏற்புடையதல்ல. எனவே இம்மனுக்கள் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும்.

4. இம்மனுக்கள் அனுமதிக்கத்தக்கதா? என்பதே தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சினையாகும்.

5. தீர்வு:

இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. மனுதாரர்கள்தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில் நிலம் கையகப்படுத்தியதில் காய்க்கும் மற்றும் நல்ல வருமானம் தரும் தென்னை மரங்களின் மதிப்பு சரியாக கணக்கிடப்படாமல் தரங்கம்பாடி வேளாண்மை இணை இயக்குநரால் குறிப்பிடப்பட்ட மதிப்பைவிட ஒரு மரத்தின் மதிப்பு மிகவும் குறைவாக மதிப்பிடப்பட்டு ரூ.5000/- இழப்பீடாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்றும், தேசிய நெடுஞ்சாலை எண் 45A விரிவுபடுத்துவதற்காக கையகப்படுத்தப்பட்ட நிலத்தில் உள்ள வளர்ந்து வருமானம் தரும் ஒவ்வொரு தென்னை மரத்திற்கும் ரூ.25,500/- இழப்பீடாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது

D KINGSLY CHRISTOPHER
Digitally signed by D KINGSLY CHRISTOPHER
Date: 2022.03.31 17:43:18 +0530

என்றும், இழப்பீட்டுத் தொகையை மதிப்பிடும்போது மரங்களின் மதிப்பு தவிர வருவாய் இழப்பும் சேர்க்கப்படவேண்டும் என்றும், கையகப்படுத்தப்பட்ட நிலங்களில் பல்வேறு மரங்கள் விடுபட்டுள்ளன என்றும், எனவே மனு சொத்துக்களை ஆய்வு செய்து, அதன் இயற்பியல் அம்சங்கள் மற்றும் அதன் வயதுக்கு ஏற்ப பல்வேறு மரங்களின் எண்ணிக்கை போன்றவற்றைக் குறித்து விரிவான அறிக்கை சமர்ப்பிக்க வழக்கறிஞர் ஆணையர் நியமனம் செய்து உத்தரவிடவேண்டும் என்று வாதிட்டார்.

6. எதிர்மனுதாரர்கள்தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில் அரசினால் கையகப்படுத்தப்பட்ட நிலத்திற்கு வழங்கப்பட்ட இழப்பீட்டுதொகை குறைவாக உள்ளதாக குறிப்பிட்டு இழப்பீட்டுத் தொகையினை உயர்த்தி வழங்கிட வேண்டும் என்று கோரி மாண்புமிகு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது என்றும், இந்நிலையில் மனுதாரர்கள் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த ரிட்மனுக்களில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்படி கையகப்படுத்தப்பட்ட நிலத்திற்கு வரைவு தீர்ப்பாணையின்படி இழப்பீட்டுத் தொகை நிர்ணயிக்கப்பட்டு வழங்கப்பட்ட காசோலையை மனுதாரர்கள் பெற்றுக்கொண்டுவிட்டனர் என்றும், அதனை மறைத்து அரசினை ஏமாற்றி இன்னும் கூடுதலாக இழப்பீட்டுத்தொகை பெற்றிட வேண்டும் என்ற எண்ணத்தில் இந்த மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே இம்மனுக்களை தள்ளுபடி செய்து உத்தரவிடவேண்டும் என்றும் வாதிட்டார்.

7. இருதரப்பும் கேட்கப்பட்டு, ஆவண சாட்சியங்கள் பரிசீலிக்கப்பட்டன. மனுதாரர்களுக்குச் சொந்தமான நிலங்கள் அரசினால் தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகம் மற்றும் மீன்வள ஆராய்ச்சிமையம் அமைத்திட கையகப்படுத்தப்பட்டுள்ளன என்பது இருதரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகள் ஆகும். மனுதாரர்கள்தரப்பில் மேற்படியாக கையகப்படுத்தப்பட்ட நிலங்களுக்கு வழங்கப்பட்ட இழப்பீட்டுத்தொகை மிகவும் குறைவு என்று குறிப்பிட்டு, இழப்பீட்டுத் தொகையை உயர்த்தி வழங்கிடக்கோரி இந்நீதிமன்றத்தில் அசல் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ளன. இந்நிலையில் மனுதாரர்கள்தரப்பில் ரெபரன்ஸ் தாக்கல் செய்யப்பட்டதற்கு பின்னிட்டு, நிலம் கையகப்படுத்தியதில் காய்க்கும் மற்றும்

D KINGSLY CHRISTOPHER

Digitally signed by D KINGSLY CHRISTOPHER
Date: 2022.03.31 17:44:03 +0530

நல்ல வருமானம் தரும் தென்னை மரங்களின் மதிப்பு சரியாக கணக்கிடப்படாமல் தரங்கம்பாடி வேளாண்மை இணை இயக்குநரால் குறிப்பிடப்பட்ட மதிப்பைவிட ஒரு மரத்தின் மதிப்பு மிகவும் குறைவாக மதிப்பிடப்பட்டு ரூ.5000/- இழப்பீடாக நிர்ணயிக்கப்பட்டுள்ளதும், பல்வேறு மரங்கள் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படாமல் விடுபட்டுள்ளதும் தெரியவந்ததாக குறிப்பிட்டு, அதனைக்கண்டு அறிக்கை தாக்கல் செய்திட வழக்கறிஞர் ஆணையர் நியமனம் கோரப்பட்டுள்ளது. அசல் மனுக்களானது மனுதாரர்களுக்கு வழங்கப்பட்ட இழப்பீட்டுத்தொகை குறைவாக உள்ளதாக குறிப்பிட்டு உயர்த்தி வழங்கக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், கையகப்படுத்தப்பட்ட நிலங்களில் மரங்கள் இருக்கும்பட்சத்தில் அவற்றின் தன்மை, வயது ஆகியவற்றை கருத்தில்கொண்டு அதற்கும் இழப்பீடு வழங்கவேண்டியது அவசியமாகும். மனுதாரர்கள்தரப்பில் பல்வேறு மரங்கள் கணக்கில் எடுக்கப்படாமல் விடுபட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ள நிலையில், மனுதாரர்களின் கோரிக்கையின் உண்மைத்தன்மையை அறியும் பொருட்டும், அசல் மனுக்களிலும் தீர்வுகாண்பதற்கு ஏதுவாக வழக்கறிஞர் ஆணையர் நியமனம் செய்யவேண்டியது அவசியம் மற்றும் நியாயமானது என இந்நீதிமன்றம் முடிவு செய்து இம்மனுக்களை அனுமதித்து, இப்பிரச்சினைக்கு தீர்வு காண்கிறது.

**நி.எ.அசல் மனு எண் 43/2019ல் இ.ம.எண் 02/2020:**

**முடிவில்,** இம்மனு அனுமதிக்கப்பட்டு, வழக்கறிஞர் திரு. எஸ்.ஜி. செந்தில்வேல் அவர்களை வழக்கறிஞர் ஆணையராக நியமனம் செய்து உத்தரவிடப்படுகிறது. வழக்கறிஞர் ஆணையர் மேற்படி மனுக்களில் உள்ள மனு சொத்தினை பார்வையிட்டு மரங்களின் எண்ணிக்கை, அதன் இயற்பியல் அம்சங்கள் மற்றும் அதன் வயது ஆகியவற்றை குறித்து விரிவான அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிடப்படுகிறது. வழக்கறிஞர் ஆணையரின் ஊதியமாக ரூ.5,000/- நிர்ணயம் செய்யப்படுகிறது. மேற்படி ஊதியத்தொகையை மனுதாரர்கள் நேரடியாக வழங்கவேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது. வழக்கறிஞர் ஆணையர் அறிக்கை தாக்கல் செய்ய வாய்தா .06.2022.

D KINGSLY CHRISTOPHER

Digitally signed by D KINGSLY CHRISTOPHER
Date: 2022.03.31 17:44:40 +0530

**நி.எ.அசல் மனு எண் 44/2019ல் இ.ம.எண் 02/2020:**

**முடிவில்,** இம்மனு அனுமதிக்கப்பட்டு, வழக்கறிஞர் திரு. எஸ்.ஜி. செந்தில்வேல் அவர்களை வழக்கறிஞர் ஆணையராக நியமனம் செய்து உத்தரவிடப்படுகிறது. வழக்கறிஞர் ஆணையர் மேற்படி மனுக்களில் உள்ள மனு சொத்தினை பார்வையிட்டு மரங்களின் எண்ணிக்கை, அதன் இயற்பியல் அம்சங்கள் மற்றும் அதன் வயது ஆகியவற்றை குறித்து விரிவான அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிடப்படுகிறது. வழக்கறிஞர் ஆணையரின் ஊதியமாக ரூ.10,000/- நிர்ணயம் செய்யப்படுகிறது. மேற்படி ஊதியத்தொகையை மனுதாரர்கள் நேரடியாக வழங்கவேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது. வழக்கறிஞர் ஆணையர் அறிக்கை தாக்கல் செய்ய வாய்தா

.06.2022.

**நி.எ.அசல் மனு எண் 45/2019ல் இ.ம.எண் 02/2020:**

**முடிவில்,** இம்மனு அனுமதிக்கப்பட்டு, வழக்கறிஞர் திரு. எஸ்.ஜி. செந்தில்வேல் அவர்களை வழக்கறிஞர் ஆணையராக நியமனம் செய்து உத்தரவிடப்படுகிறது. வழக்கறிஞர் ஆணையர் மேற்படி மனுக்களில் உள்ள மனு சொத்தினை பார்வையிட்டு மரங்களின் எண்ணிக்கை, அதன் இயற்பியல் அம்சங்கள் மற்றும் அதன் வயது ஆகியவற்றை குறித்து விரிவான அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிடப்படுகிறது. வழக்கறிஞர் ஆணையரின் ஊதியமாக ரூ.10,000/- நிர்ணயம் செய்யப்படுகிறது. மேற்படி ஊதியத்தொகையை மனுதாரர்கள் நேரடியாக வழங்கவேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது. வழக்கறிஞர் ஆணையர் அறிக்கை தாக்கல் செய்ய வாய்தா

.06.2022.

**நி.எ.அசல் மனு எண் 46/2019ல் இ.ம.எண் 02/2020:**

**முடிவில்,** இம்மனு அனுமதிக்கப்பட்டு, வழக்கறிஞர் திரு. எஸ்.ஜி. செந்தில்வேல் அவர்களை வழக்கறிஞர் ஆணையராக நியமனம் செய்து உத்தரவிடப்படுகிறது. வழக்கறிஞர் ஆணையர் மேற்படி மனுக்களில் உள்ள மனு சொத்தினை பார்வையிட்டு மரங்களின் எண்ணிக்கை, அதன் இயற்பியல் அம்சங்கள் மற்றும் அதன் வயது

D KINGSLY CHRISTOPHER

Digitally signed by D KINGSLY CHRISTOPHER
Date: 2022.03.31 17:44:57 +0530

ஆகியவற்றை குறித்து விரிவான அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிடப்படுகிறது. வழக்கறிஞர் ஆணையரின் ஊதியமாக ரூ.5,000/- நிர்ணயம் செய்யப்படுகிறது. மேற்படி ஊதியத்தொகையை மனுதாரர்கள் நேரடியாக வழங்கவேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது. வழக்கறிஞர் ஆணையர் அறிக்கை தாக்கல் செய்ய வாய்தா .06.2022.

இப்பொதுவான உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2022ம் ஆண்டு மார்ச் மாதம் 31ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

D KINGSLY CHRISTOPHER

Digitally signed by D KINGSLY CHRISTOPHER
Date: 2022.03.31 17:45:20 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
நாகப்பட்டினம்.